நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு.எம்.குணசேகர், பி.எஸ்.ஸி.,

நி.மு.11825/2020/அ3 நாள் : 23.04.2021.

பொருள்: தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நியமனம் (நேரடி) தொகுதி-IV - (2018-2019 மற்றும் 2019-2020) தமிழ்நாடு அமைச்சுப்பணி - இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணி வரன்முறை செய்து ஆணையிடல் - தொடர்பாக.

பார்வை:
1. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர், கடிதம் எண்.2518/PSD-I/2020, நாள்:30.05.2020.
2. நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை ந.க.11825/2020/அ3, நாள்:29.08.2020.
3. நாகப்பட்டினம் மாவட்ட முதன்மை கண்காணிப்பு குழு / மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணை ந.க.22342/2020/எல்4, நாள்:12.02.2021.
4. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய துணைச் செயலாளர் கடித எண்.2518/PSD-D2/2020, நாள்:27.03.2021.
5. மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள்.

-------

ஆணை :

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தினால் தொகுதி-IV-ல் உள்ளடக்கிய இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் 2018-2019 மற்றும் 2019-2020-ஆம் ஆண்டிற்கு தேர்வு செய்யப்பட்ட 12 நேரடி இளநிலை வருவாய் ஆய்வாளர்களை நாகப்பட்டினம் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்து பார்வை1-இல் காணும் சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அலுவலக கடிதம் மூலமாக வரப்பெற்றதைத் தொடர்ந்து, கீழ்க்கண்ட விவரப்படி நாகப்பட்டினம் மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தற்காலிகமாக பணி நியமனம் வழங்கப்பட்டு கலம்-3-ல் கண்டுள்ள நாளில் தனியர்கள் பணியேற்றுள்ளனர். அதில் மயிலாடுதுறை மாவட்ட பிரிவினையில் சொந்த விருப்பத்தின் பேரில் மாவட்ட மாறுதலில் 7 நபர்கள் மாறுதலில் சென்றுவிட்டனர் நாகப்பட்டினம் மாவட்ட வருவாய் அலகில் உள்ள கீழ்காணும் 5 நபர்களுக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் கலம் எண்.4-இல் கண்டுள்ளவாறு பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் (திருவாளர்கள்) / பணி புரியும் அலுவலகத்தின் பெயர் / முகவரி | பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | **பி. டானியா,**<br>'ஜ3' பிரிவு,<br>மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,<br>நாகப்பட்டினம். | 29.08.2020 முற்பகல் | 29.08.2020 முற்பகல் |
| 2. | **எம்.கனிமொழி,**<br>வட்டாட்சியர் அலுவலகம்,<br>வேதாரண்யம். | 29.08.2020 முற்பகல் | 29.08.2020 முற்பகல் |
| 3. | **கே.மாணிக்கவள்ளி,**<br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், நாகப்பட்டினம். | 29.08.2020 முற்பகல் | 29.08.2020 முற்பகல் |
| 4. | **வீ.கஜலஷ்மி,**<br>மாவட்ட வழங்கல் அலுவலகம்,<br>நாகப்பட்டினம். | 29.08.2020 முற்பகல் | 29.08.2020 முற்பகல் |
| 5. | **ஆர்.இரவிச்சந்திரன்,**<br>மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், நாகப்பட்டினம். | 29.08.2020 முற்பகல் | 29.08.2020 முற்பகல் |

சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள ரிட் மனுக்களின் தீர்ப்புக்கு உட்பட்டது என்ற நிபந்தனையின் பேரில் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(ஒ-ம்) எம்.குணசேகர்.
மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது)
நாகப்பட்டினம்.

/ஆணைப்படி/

23/04/2021

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்

தொடர்புடைய நபர்கள்.

23/04/2021

நகல் : மாவட்ட ஆட்சித்தலைவர், மயிலாடுதுறை.
நகல் : மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர், நாகப்பட்டினம்.
நகல் : மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர், நாகப்பட்டினம்.
நகல் : மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நல அலுவலர், நாகப்பட்டினம்.
நகல் : 'ஜ3' மற்றும் 'ஈ' பிரிவு தலைமை உதவியாளர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், நாகப்பட்டினம்.
நகல் : வருவாய் வட்டாட்சியர், வேதாரண்யம்.
நகல் : கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம்,சென்னை-5.
நகல் : செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், வ.உ.சி.நகர், சென்னை- 3.
நகல் : முகாம் உதவியாளர் மாவட்ட ஆட்சித்தலைவர்/ மாவட்ட வருவாய் அலுவலர்.